உ

சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'

"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. 1093 தை, திருவனந்தபுரம்: FEBRUARY 1918. பகுதி 12.

பொருள் அடக்கம்

	விஷயம்.	பக்கம்.
1.	பிரம்மஸ்ரீ K. G. சேஷய்யரவர்கள்	222
2.	சரித்திரப்பயிற்சியின் மகிமை	225
3.	பிரபஞ்சவிதி	227
4.	ஆசையின் முடிவு	229
5.	மாயத்துறவு	231
6.	நாஞ்சினாட்டு மருமக்கள்வழி மான்மியம்	235
7.	கடைச்சங்க காலம்	237
8.	திருவிதாங்கோட்டுத் தமிழர் சங்கம்	239
9.	பற்பல குறிப்புகள்	240
10.	புங்கள வாழ்த்து	,,

சந்தா விவரம்

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Childre

Annual Subscription Rs. 2

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	,,	3—0—0
Quarter page or ½ column	,,	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. NAGASUBRAHMANYA RAO BROS.

Publishers, Trivandrum.

பிரம்மஸ்ரீ K. G. சேஷய்யரவர்கள்.

இவ்விடம் ஹைக்கோர்ட்டுவக்கீலாக இருந்த பிரம்மஸ்ரீ K. G. சேஷய்யரவர்கள், திருவிதாங்கோட்டு ஹைக்கோர்ட்டு ஜட்ஜியாக நியமனம் பெற்றிருக்கும் நல்விஷயத்தை இதற்குள் இந்துதேசத்தாரெல்லாம் அறிந்திருக்கக்கூடும். இதைப்போன்ற ஸர்வஜன ஸம்மதமான ஒரு நியமனம் சமீபகாலத்தில் திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தில் உண்டானதில்லையென்று இந்நாட்டாரெல்லாம் ஒரேமுகமாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

பிராமணர் பிராமணரல்லாதார் வழக்குத் தென்னாட்டைச் சூழ்ந்து படர்ந்துவருமிக்காலத்தில், பற்பல சமயத்தினரும பலப்பல பாஷையினரும் பலபல ஜாதியினரும் அடங்கிய இந்நாட்டில், இந்நியமனத்தை ஜாதிமத பாஷை வித்தியாசமின்றி ஸர்வஜனங்களும் நன்குமதித்து மகிழ்ச்சியடையக் காரணம் யாது? சிலர் அவர்களது ஸாஹித்திய பாண்டித்திய விசேஷமே காரணமென்பர். சிலர் அவர்களது சட்டபரிஜ்ஞானமே காரணமென்பர். சிலர் அவர்களது விடாமுயற்சியே காரணமென்பர். எனது தாழ்மையான அபிப்பிராயத்தில் ஸர்வஜனஸம்மதமான அவர்களது தற்கால உயர்ச்சிக்கு ஏற்பட்ட காரணம் இவைமட்டுமன்று. மேற்கூறியவைகளில் அவர்களுக்கு இணையானவர்களோ மேலானவர்களோ பலர் இருத்தல் கூடும். ஆனால் அவற்றோடு அவர்களிடத்துச் சேர்ந்து விளங்கும் தீவிரமான ஸத்தியநேசமும், ஆடம்பரமில்லாத நற்குணமிகுதியும், பொன்னினும் புனிதமான தூயமனமும் ஜாதித்துவேஷமென்பதே அணுவளவுமில்லாதஸமரஸபாவனையுமே மெய்யானகாரணமாகும். இவ்வுண்மையை அவர்களோடு அடுத்துப்பழகப்பாக்கியம் பெற்றோரெல்லாம் உணர்ந்தும் இருப்பார்கள்.

இந்துதேசத்தில் தற்காலத்தில் படிப்புடையவர்களுக்குப்பஞ்சமே இல்லை. ஆனால் படிப்பும் அப்படிப்புக்கேற்ற குணநலமும் உடையவர் தொகையே மிகச் சொற்பமாக இருக்கின்றது. படிப்பாளிகளெல்லாம் நன்னெறிச் செறிவும் உடையவர்களாயிருந்திருப்பின் இந்துதேசத்தின் நிலைமை வெகுகாலத்துக்கு முன்னமேயே மிகப் பெருமையடைந்திருக்கும்.

நற்குணப் பஞ்சம் மிகுந்த இக்காலத்தில் அதனைப்பெற்று விளங்கும் எவருக்கேனும் ஒரு உயர்ச்சியுண்டாகுங்காலத்து அதனை ஸர்வஜனங்களும் தத்தமக்கே நேர்ந்ததாக எண்ணி மகிழ்வடைவது ஒரு பொழுதும் வியப்பாகாதே. இந்தியர்களின் நிலைமை தற்காலத்து எவ்வளவுதான் தாழ்வாக இருப்பினும், தக்காரை மதிக்கும் உத்தமகுணத்தில் அவர்கள் முழுதும் சூன்னியராயிருக்கிறார்கள் என்று சொல்ல எனக்கு மனத்துணிவு வரவில்லை. ஆகவே உத்தமகுணக்களஞ்சியமாகிய பிரம்மஸ்ரீ K. G. சேஷய்யரவர்களின் ஜீவசரித்திரச் சுருக்கத்தையறிய நம்மவர்கள் வெகு ஆவலாயிருப்பார்கள் என்று நம்பி இங்கே எழுதத்தொடங்குகின்றேன்.

பிரம்மஸ்ரீ அய்யரவர்கள் 1867 டிசம்பர் மாதத்தில் பிறந்தார்கள். அவர்களுடைய பிதா பிரம்மஸ்ரீ கோபாலய்யர் அவர்கள் முதலில் திருநெல்வேலியில், ஒரு வக்கீல் குமஸ்தாவாக இருந்து, வக்கீல் பரீட்சையில் தேர்ச்சியடைந்த பின்னர் இவ்விடம் ஜில்லாக் கோர்ட்டு வக்கீல் ஆனார்கள். ஆகவே நமது சேஷய்யரவர்கள் வித்தியாப்பியாசமெல்லாம் இவ்விடம் மகாராஜா ஐஸ்கூலிலும், கலாசாலையிலுமே நடந்தேறியது. 1851-ல் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேர்ச்சியடைந்தார்கள். கலாசாலை வகுப்பில் சேர்ந்தபொழுது டாக்ற்றர் ஹார்வி, டாக்ற்றர் ராஸ், டாக்ற்றர் ரீட் முதலிய போதகர்களிடத்துப் பயின்று 1886-ல் B. A. பரீட்சையில் தேர்ச்சியடைந்தார்கள். அக்காலத்தில் B. A. பரீட்சைக்கு, ஆங்கிலமும், ஏதேனும் ஒரு இந்தியபாஷையும், விருப்பவிஷயமாக ஏதேனுமொருசாஸ்திரமும் படிக்கவேண்டியது ஏற்பாடாகவிருந்தது. அதன்படி பொதுவிஷயமான ஆங்கிலத்தோடு தமிழும் விருப்பவிஷயமாக இரஸாயன சாஸ்திரமும் (Chemistry) பயின்றதுடன், காலஞ்சென்ற புரொபஸர் P. சுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் தத்துவசாஸ்திரம் படிக்கவிரும்பி அந்த சாஸ்திரமும் படித்தது வகுப்புப் பரீட்சையில் இரண்டிலும் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார்கள். ஸர்வகலாசாலைப் பரீட்சையில் இங்கிலீஷ், தமிழ், இரசாயன சாஸ்திரம் ஆகிய மூன்றிலும் முதல் பகுப்பில் ஜெயமடைந்தார்கள். இதனாலே அவர்களது மாணவப்பருவம் எவ்வளவு வெற்றியுடையதாயிருந்ததென்று சொல்லாமலே விளங்கும். இத்தருணத்தில் குடும்பப் பொறுப்பைத் தாங்கவேண்டிய அவசியம் உண்டாக, இவ்விடம் மகாராஜா கலாசாலையில் இரசாயனபோதகராக நியமனம் பெற்றார்கள். அவ்வுத்தியோகத்தில் 4, 5 வருஷம் அமர்ந்திருந்தார்கள். இதற்கிடையில் B. L. பரீட்சைக்கும் படித்து விஜயமடைய, ஆசிரியர் வேலையைவிட்டு வக்கீலானார்கள். வக்கீல் வேலையில் பெயரெடுக்க, வெகுகாலம் காத்திருக்கவேண்டியதாக வரவில்லை. நீதிசாஸ்திரத்தில் இணையற்ற பாண்டித்தியமும், 'கேஸ'களின் நுட்பங்களை எளிதிலுணரும் தீவிர புத்தியும், பேசவேண்

டிய விஷயங்களைத் திறம்படவுரைக்கும் சொல்வன்மையும் அவர்களிடத்துப் பூர்ணமாய் அமர்ந்திருந்ததனால் வெகு சீக்கிரத்தில் வக்கீல்களுக்குள்ளே தலைமைஸ்தானம் பெற்றார்கள். ஆகையால் இவ்விடம் நீதிசாஸ்திரக் கலாசாலையில் போதகர் ஸ்தானமும், ஸர்வகலாசாலையில் நீதிசாஸ்திரப் பரீட்சகர் ஸ்தானமும் தன்படியேவந்தன. இதற்குமுன் ஸர்வகலாசாலை இங்கிலீஷ் பரீட்சகர் ஸ்தானமும் வகித்துள்ளார்கள். இவ்வாறாக அவர்களுக்கு உத்தியோக ஸம்பந்தமானவேலையும் பொறுப்பும் வேண்டியமட்டும் இருந்தாலும் பொதுஜன க்ஷேமத்துக்கான உழைப்பிலும் அவர்கள் உபேட்சையாயிருக்கவில்லை. அவர்களுடைய தூண்டுதலினாலேயே இவ்விடம் மகாராஜா கலாசாலையில் வருஷோத்ஸவக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. நமது ஸமஸ்தானச் சட்டசபையிலும் இரண்டுமுறை 'மெம்பர்' ஸ்தானம் வகித்தார்கள். அவர்கள் மெம்பராக இருந்த காலங்களில் உருப்பெற்ற சட்டங்களிலெல்லாம் அவர்களது அநுபவமுதிர்ச்சியும், பாண்டித்திய பரிபாகமும் சாயல் பெறாதிருக்கவில்லை. வக்கீல் சங்கம், சாசுவதநிதி (Permauont Fund), பிராமணர் சங்கம் முதலிய ஸ்தாபனங்களுக்குத் தலைவராக இருந்து அவற்றையும் சீர்த்திபெற நடத்திவருகிறார்கள்.

இதுவரையிலும் கூறிவந்த விஷயங்களெல்லாம் அநேகமாய் ஸாதாரணமானவை யாதலால் பிரத்தியேக ஸ்துதிக்குக் காரணமில்லையே யென்று சிலர் சந்தேகம் கொள்ளலாம். ஆம்! இதுவரையிலும் ஸாதாரணவிஷயங்களையே சொல்லிவந்தேன். அவர்களுக்கே உரித்தான பிரத்தியேகவிஷயம் இனித்தான் ஆரம்பமாகின்றது.

ஸாதாரணமாக கலாசாலையைவிட்டு வெளிவருவதோடு படிப்பு முடந்துபோவதாகவே நம்மவருக்குள் ஒரு பொதுவான நம்பிக்கை; ஆகவே ஏதேனும உத்தியோகத்தில் அமர்ந்தவுடனே தப்பித்தவறிவீட்டுமூலைகளில் கிடக்கும் புஸ்தகங்களை எவ்வாறாயினும் தம கண்பார்வையிலிருந்து மறைவுசெய்துவிட்டு நம்மவர்கள் ஜீவிதம் தொடங்குகிறார்கள். பின்னாலுள்ளவேலையெல்லாம் பணத்தேட்டவேலைதான். புஸ்தகங்களைக் கண்டால் பூசிங்களைக் கண்டதுபோலவும் பத்திரிகையைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோலவும் நடுக்கம் கொள்ளுவார்கள். அவர்களுக்கு பணந்தேட்டந்தவிர மற்ற ஆசைகளெல்லாம் நிறைவேறிவிட்டதாக நம்பிக்கை. உயர்வான ஒரு ஆசையைக்கொள்வதற்கு மனவிகாசம் பெற்றிருந்தால்தானே அவர்களுக்கு அந்நாட்டம் உண்டாக இடமுண்டு. புஸ்தகப்படிப்புக்கும் உண்மைப்படிப்புக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. புஸ்தகப்படிப்புப் பள்ளிக்கூடத்துக்கப்புறம் இல்லை. உண்மைப்படிப்பு நமது நிழல்போல் நாமுள்ள இடமெல்லாம் எக்காலத்துமுண்டு. ஸர்வகலாசாலை 'கலண்டர்'களைப்பார்த்தால் பதினாயிரக் கணக்கான கலாசாலைப் பட்டதாரிகளின் பெயர்கள் அலங்காரமாக அச்சிடப்பெற்றிருப்பதைக் காணலாம். ஆனால் அவர்களுக்குள் உண்மைப்படிப் பாளிகள் எத்தனைபேர் என்று கணக்கிடத்தொடங்கும்பொழுதுதான் மனம் நடுக்கங்கொள்ளும். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள ஒரு முக்கிய வித்தியாசம் இவ்விஷயத்தில் தான். பயிற்சி (Culture) என்பது நம்மவருள் மிக அபூர்வம். திருவாசகம், நாலடியார் குறள் முதலிய நூல்களை நூதனமுறை யுரையுடன் மொழிபெயர்த்து அச்சியற்றிய டாக்டர் போப்பும், திராவிட இலக்கணங்களைப் பயின்று மேனாட்டு சாஸ்திரீகமுறையில் தொகுத்தெழுதிய டாக்டர் கால்டுவெல்லும் பாதிரிமார்கள். அவர்களுடைய தொழில்களுக்கும் இக்கலைப் பயிற்சிக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? இதுபோலவே ஒரு ரெயில்வே உத்தியோகஸ்தரான ஒரு ஆங்கிலேயர் ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகங்களில் மகா பாண்டித்தியமுடையவராய் திருச்சிறாப்பள்ளியில் இருக்கிறார். கவனமுறையில் தேர்ச்சிபெற்ற ஒரு ஒயின் வியாபாரியைப் பற்றியும் நான் கேட்டிருக்கிறேன். மேனாட்டார் உடல் வளர்சசிக்கு ஏதேனும் ஒரு தொழிலைப் பின்பற்றி உயிர் அல்லது உளவளர்ச்சிக்கு கலைப்பயிற்சியில் தமது காலத்தைச் செலவு செய்கிறார்கள். அதனாலேயே அவர்களுக்குள் அறிவும், நாகரீகமும் செல்வமும், பொதுப்பயிற்சியும் மேலோங்கிவருகின்றன. நம்மவருக்குள் அந்நாட்டம் இல்லாமையே நமது தற்கால இழிநிலைமைக்கு முக்கிய காரணமாம்.

இவ்விஷயத்தில் நமது சேஷய்யரவர்களின் நிலை மிகவும் உந்நதமானதேயாம்.

நம்மவர்கள் தமது தினப்பொழுதின் ஸந்தோஷகரமான மிகுதிப்பாகத்தையும் உத்யோகவிஷயமாகச் செலவுசெய்து நித்திராதேவியோடு ஸல்லாபம் செய்யும் காலத்தில் நமது சேஷய்யரவர்கள், ஷேக்ஸ்பியர், மில்ற்றன், பயிரண், ஷெல்லி, வேர்ட்ஸ்வர்த்து, ப்ரௌணிங், இளங்கோவடிகளாதியான சங்கப்புலவர்கள், கம்பன், மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், முதலிய புலவர் பெருமக்களோடு பேதமறக்கலந்து களிப்படைந்திருப்பார்கள். கிரந்த காலட்சேபம் அவர்களது நித்திய கருமாநுஷ்டானங்களில் ஒரு முக்கியமானபாகம். இந்த ஸாஹித்யபாண்டித்தியவேட்கை புகழ்விருப்பத்தாலோ பொருள் விருப்பத்தாலோ உண்டான ஒரு செயற்கைக் குணமன்று. அது அவர்களது ஜனனகாலந்தொட்டே அவர்களோடு அமைந்து வளர்ந்துவரும் இயற்கைக் குணம். இவ்விடம் ஹைகோர்ட்டு வக்கீல்களுக்குள் தலைமைஸ்தானம் வகிப்பவர்களில் ஒருவரான அவர்களுக்கு அவர்களுடைய உத்தியோகஸம்பந்தமான வேலையே மித மிஞ்சினதாக இருந்தும், பல பொதுஸ்தாபனங்களின் காரியநிருவாகப் பொறுப்பு ஒரு பக்கமிருந்தும், சட்டசபை மெம்பர்ஸ்தானத்துக்குரிய பொறுப்புகள் பலஇருந்தும், ஸாஹித்தியவிஷயங்களிலும் கவனம் செலுத்துவதற்கு அவர்கள் ஸமயந்தேடிக்கொள்

வதிலேயே அவர்களது வித்தியாவேட்கை எவ்வளவு தீவிரமானதென்று யாருக்கும் அதிகப்பிரயாசையின்றி உணர்ந்துகொள்ள முடியும். உண்மையில் அவர்கள் வக்கீல் உத்தியோகத்தில் சென்றது வித்தியா பிலாகாவிற்குப் பெருத்த நஷ்டமெனறே சொல்ல வேண்டும். அவர்கள் ஜீவிதந்தொடங்கின வித்தியாபிலாகாவிலேயே அவர்களிருந்திருப்பார்களாயின், அவர்களுக்குத் தற்காலம் கிடைத்திருப்பதைவிடப் பதின் மடங்கு அதிகமான பெயரும் புகழும் வெகுகாலத்துக்கு முன்னரே அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடுமென்பது திண்ணம் திண்ணம்! சிலர் ஆங்கில நூல்களைக் கற்பதே கௌரவமானதென்றெண்ணித் தேச பாஷைகளைக் கவனியாது விடுகிறார்கள். ஆனால் இவர்களோ ஆங்கிலத்திலும் தமிழிலும் ஸமமான அபிமானமும பாண்டித்தியமும் உடையவர்கள். ஆங்கிலப் புலவர்களாகிய பைரண், ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த்து, ப்ரௌனிங், முதலியோர்களின் நூல்களையும் மனோன்மணீயத்தையும் ஆராய்ச்சிசெய்து ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் உபந்யாசங்களும், மாதுஸ்ரீ ஆனிபெசன்று, ப்ளவட்ஸ்கி முதலியோரின் ஜீவசரித்திரங்களும், தமிழில் வெளியிட்டுள்ள, மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சியும், சிலப்பதிகாரகாலத்தைப் பற்றிய ஆங்கில உபந்யாசமும், இருமொழிகளிலும் அவர்களுக்குள்ள பாண்டித்தியத்தையும், ஆராய்ச்சி வன்மையையும் இனிது விளக்கும். ஸத்தியதேவதை கதையென்னும் அவர்களது சிறுவசன நூலும் தமிழிலக்கியத்துக்குச்சிறந்த அலங்காரமே ஆகும்

ஸாஹித்தியவிஷயமான அவர்களது உழைப்பு இங்ஙனமாக பொதுஜன க்ஷேமத்துக்கான அவர்களது நல்லுழைப்பும் அற்பசொற்பமானதல்ல. சட்டசபை மெம்பராக இருந்த காலங்களில் அவர்கள் செய்த வேலைகளின் பெருமைகளை யாவரும் அறிந்துள்ளார்கள் ஆகையால் அவ்விஷயத்தைப்பற்றி விரித்துரைக்க நான் துணியவில்லை.

இவ்விடம் நடக்கும் பொதுக்கூட்டங்களில் அவர்களை ஸபாநாயகராகப்பெறாத கூட்டங்கள் மிகச் சொற்பமாகவே இருக்கும். எவ்வளவுதான் நெருக்கமான வேலையிருந்தாலும பொதுஜனங்களின் விருப்பங்களைப் புறக்கணிக்க அவர்கள் ஒருபொழுதும் துணியார்கள். ஸபாநாயகர் ஸ்தானத்தில் அவர்கள் செய்யும் பிரசங்கங்களோ ஸபையாருக்கு ஒரு நல் விருந்தாகவே இருக்கும்.

குடும்பஜீவிதத்திலும் அவர்களது நிலைமை மிகவும் உத்தமமானதே.

"தென்புலத்தார் தெய்வம்விருந்தொக்கல்தானென்றாங் கைம்புலத்தாறோம்பல் தலை"

என்ற தேவர் மொழிக்கு அவர்களது இல்லறமே சிறந்த திருஷ்டாந்தம்.

தெய்வகிருபையால் 4 புத்திரர்களையும 1 புத்திரிகையும்பெறறுள்ளார்கள். முதல் புத்திரனை பிரமமஸ்ரீ K. S. கோபாலய்யர் அவர்கள் B. A. B. L. இவ்விடம் ஹைகோர்டு வக்கீலாகவும் மற்ற மூவரும மாணாக்கர்களாகவும் இருக்கிறார்கள். முதல் புத்திரியின புருஷர் பிரம்மஸ்ரீ S. சுப்பய்யாவய்யர் B. A, B. L. மதுரையிலும் இண்டாவது புத்திரியின் புருஷர் பிரம்மஸ்ரீ K. G. சங்கரய்யர் அவர்கள் B A., B. L. இவ்விடத்திலும வக்கீல்களாக அமர்ந்துள்ளார்கள்.

தக்கார் தகவிலரென்பதவரவர்
எச்சத்தாற் காணப்படும்

என்ற பொய்யாமொழியும் இவர்கள் விஷயத்தில் பொய்யாமலே இருக்கிறது,

இவ்வாறாக எல்லாப் பாக்கியங்களும் சிறக்கப் பெற்று விளங்கும் சேஷய்யரவர்கள், இன்னும் பல காலம் ஆயுராரோக்கிய ஸம்பூர்ணராக இருந்து. இந்த ஸமஸ்தானத்தில் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த உத்தியோகபதவியும் பெற்று வாழுமாறு ஸர்வாபீஷ்டதாயகரான பரம்பொருளை மனமொழி மெய்களால் வேண்டுகின்றேன்.

அவர்கள் ஹைக்கோர்ட்டு ஜட்ஜியாக உயர்த்தப் பெற்றவன்று நான் அவர்களுக்கு ஸமர்ப்பித்த வாழ்த்துப்பாக்களையும் இதனடியிற் சேர்க்கின்றேன்.

வாழ்த்துப்பா.

(1) பாதிமதி வேணிப் பரமன் திருவருளால்
நீதிபதியாமேல் நிலைபூண்டாட—ஓதுதமிழ்
நாடும் கலையும நடுநீதியுந திருவாழ்
கோடும் பெருமைகொள வே.

(2) என்னகத்தே பொங்கியெழும இன்பவுணர்வத்தனையும்
பன்னவொரு நாவுடையேன் பாத்திரனோ—வன்னமதி
கண் டெழுந்த நாதக்கடலானோல், காசினியை உ-
கொண்டெழுந்த போற்றுகுணத் தோய்.

(3) வஞ்சிக் கனியாய் வளர்பூபதியின் நாயகமாய் [சவிஸா
விஞ்சுமன்பர் உள்குளிர் செய்வெண்மதியாய்—எஞ்
மக்களொடு நாளும் மகிழ்சிறந்து பாற்கடல் போல்
ஒக்கலொடு வாழி யுயர்ந்தே.

S. முத்துசுவாமிப் பிள்ளை.

சீப்செக்ரிட்டரியாக நியமனம் பெற்றிருக்கும் பிரம்மஸ்ரீ R. மகாதேவய்யரவர்கள் B. A. யின் ஜீவசரித்திரச்சுருக்கம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

சரித்திரப் பயிற்சியின் மகிமை.

ஸ்ரீமான் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்.

ஒரு தேசத்தின் செல்வம், கல்வி, நாகரிகம் முதலிய எவ்வகை வளர்ச்சிக்கும் சரித்திரமே முக்கிய காரணம். நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழும் நாள் சொற்பமே. அதிற்பாதி உறக்கத்தில் போய்விடும். இன்னுமோர் பாகம் வாலிபப்பருவத்திலும் பின்னுமோர் பாகம் கிழப்பருவத்திலும் போக மீதமாய் நிற்கும் சொற்பகாலத்தில் நமது அநுபவத்தில் வரக்கூடிய விஷயங்கள் மிகச் சுருக்கமாகவே இருக்கும். ஆகையால் நாம் பூர்வசரித்திரம் படிக்காமல் பிரத்தியட்சத்தில் காணவும் கேட்கவும் கூடிய விஷயங்களோடு மட்டும் திருப்தியடைந்து விடுவோமானால் நம்மைப்போல ஞானசூனியர்கள் இவ்வுலகத்தில் உண்டோ? இப்பிரபஞ்சம் தோன்றிய நாள்முதல் சராசரமாகிய [illegible] ஒவ்வொரு அமிசமும் அதன் வளர்ச்சிக்காக உழைத்தே வருகின்றது. அவ்வளர்ச்சியைப் பற்றிய விருத்தாந்தங்களை அவ்வக்காலத்து வாழ்ந்த அறிவாளிகள் ரேகைப்படுத்தியும் வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் பட்டபாடும் அற்பசொற்பமல்ல. அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு கொலம்பசும், பூமியின் ஆகர்ஷணசக்தியை உலகத்தாருக்கு அறிவிக்க ஸர் ஐஸக் நியூட்டனும், பரிணாமவாதத்தை ஸ்தாபிக்க டார்வின் சாஸ்திரியாரும், மின்சார சக்தியின் நுட்பங்களை விளக்குதவற்கு எடிசனும், அச்சுயந்திர வேலையை ஜனோபகாரமாக்க் காக்ஸ்டனும் ஐரோப்பா முழுவதையும் நிலைகுலையச் செய்த நெப்போலியனை அடக்குவதற்கு வெல்லிங்டன் பிரபுவும், ஒருவரோடொருவர் போர்புரிந்து பிரிந்துநின்ற மகமதியர்களையும் இந்துக்களையும் ஐக்கியப்படுத்தி மொகலாய மகாராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அக்பரும், மகாராஷ்டிர ராஜ்யத்தை உண்டுபண்ண சிவாஜியும், உலகத்தோர் தெய்வச்சிந்தனையற்றுத் தீவழிச்செல்ல நேர்ந்த காலங்களில் அவர்களுக்கு நல்வழிகாட்டி உய்விப்பதற்காக உழைத்த இயேசுகிறிஸ்து, மகமதுநபி, புத்தர், சங்கராசாரியர், ராஜாராமமோகன்ராய், கேசப் சந்திரசேனர், தயானந்த ஸரஸ்வதி, விவேகாநந்தர் முதலியோரும், இன்னும் எண்ணிறந்த பெரியோர் பலரும் உழைத்த உழைப்பையும் பட்டபாட்டையும் விரித்துரைக்க இப்பத்திரிகையைப்போல் ஆயிரம் பத்திரிகைகளைத் தினந்தோறும் வெளியிட்டாலும் முடியவே முடியாது. ஆகையால் அச்சரிதங்களை நமக்கு இயன்ற அளவாவது படித்துப் பயனடைய முயலவேண்டியது நம்மேல் பொறுத்த கடமையன்றோ? இதுவன்றி அப்புண்ணிய மூர்த்திகளுக்கு நம்மால் செய்யக்கூடிய கைம்மாறும் உளதோ? உலகசரித்திரங்களை யெல்லாம் ஏகதேசமாகவாவது படிக்கத்துணிபவன், உலகந்தோன்றிய நாள்முதல் இந்நாள்வரையிலும் ஜீவித்திருந்த பலனை அடைகின்றான். அங்ஙனம் செய்யத் துணியாதிருப்பவன் நூறாண்டு வாழினும் கருக்குழியில் அழிவடைந்தவனை ஒப்பவனே ஆவன்.

துரதிர்ஷ்டவசமாய் இந்துதேசத்தார் சரித்திர ஞானத்தை அடைய ஒருபொழுதும் முயற்சித்ததே இல்லை. நம்முடைய சரித்திரங்களெல்லாம் நம்முடைய புராணங்களே. அவற்றுள் கற்பனையலங்காரங்களாகவும் கூடார்த்தமாகவும், இன்னும் பலபோலி வடிவங்களாகவும் நிற்பனவற்றைத் தள்ளிவிட்டால் சரித்திரமுறையில் கைக்கொள்ளக் கூடியதாக எஞ்சி நிற்பவை மிக மிகச் சொற்பமேயாகும். ஆதலால் நமது தேசவிருத்தாந்தங்களைப் பிற நாட்டாரிடம் கற்கவேண்டிய துர்ப்பாக்கியத்தை அடைந்துவிட்டோம். அவர்மூலம் வரும் சரித்திரமோ எப்பொழுதும் சரியாகவும் இருக்கவில்லை. சென்ற மாதப்பத்திரிகையில் வெளிவந்த "ஒளரங்கசீபும் மகாராஷ்டிரரும்" என்ற விஷயத்தைப் படிப்பவர்களுக்கு வெளிநாட்டார்மூலம் வரும் சரித்திரங்கள் எவ்வளவு தப்பானதாக இருக்கின்றன என்று விளங்கும். நமது பாக்கியவசமாய் இப்பொழுது அநேக இந்தியப்படிப்பாளிகள் இந்துதேச சரித்திர ஆராய்ச்சியில் தலையிட்டிருக்கிறார்கள். நாள்தோறும் நமது தேசசரித்திரத்தைப்பற்றிய புதுவிஷயங்களும் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. இருள் மயமாயிருந்த நமது பூர்வ சரித்திரம் இப்பொழுது பிரகாசமடையத் தொடங்குகின்றது. இது நமது க்ஷேமத்துக்கான நன்னிமித்தமென்றே தேசாபிமானிகள் ஒப்புக்கொள்வார்கள்.

நம்முன்னோர் சரித்திரப் பயிற்சியில் சிரத்தை வைக்கவில்லையென்று மேலே கூறினேன். அதனால் நமது தேசபாஷைகளில் சரித்திரநூல்கள் மிகவும் அபூர்வமாகவே இருக்கின்றன. இக்குறைபாட்டையுணர்ந்த தற்காலப் படிப்பாளிகள் தேசபாஷைகளி

னும் சரித்திர நூல்களைப் பிரசுரித்து வருகிறார்கள். வங்காளி, தெலுங்கு, மாராத்தி முதலிய பாஷைகளில் ஏராளமான நூல்கள் வெளிவந்தும், வந்துகொண்டும் இருக்கின்றன. மலையாளத்திலும் அநேகமாய் வருஷந்தோறும் இத்தகைய நூல்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. நமது தமிழ் பாஷையின் நிலைமைதான் பரிதாபகரமாக இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகமாக இருக்கும் சரித்திர நூல்களைத் தவிர வேறு நூல்களைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. சுதேசமித்திரன் பத்திராதிபராயிருந்த ஜி. சுப்பிரமணியய்யர் அவர்கள் ஜெப்பான் தேசசரித்திரம் வெளியிட்டார்களாயினும் அதன் முதற்பதிப்பைச் செலவாக்குவதே அவர்களுக்குப் பகீரதப்பிரயத்னமாய் முடிந்தது. இரண்டாம் பதிப்பு வெளிவந்ததாகத் தோற்றவுமில்லை. வேறு நூதனமாக வெளிவந்துள்ள சரித்திர நூல்களையும் காணோம். தென்னிந்தியர்களில் 100-க்கு 5 பெயராவது சரித்திரஞானமுடையவர்களாயிருப்பார்களோ என்பது சந்தேகவிஷயமே. சரித்திரஞானமில்லாத இவர்களிடத்து நாகரீகப்பறை கொட்டுவது செவிடன் காதில் சங்கூதத்துணிந்த கதைக்கொப்பாகவே முடியும். சீனியின் சுவையறிந்தவனுக்கே சீனியின்பேரில் பிரியமுண்டாகும். மேனாட்டாரின் நாகரீக நிலைமையையும் அதன் உற்பத்திவளர்ச்சிகளையும் அறிந்தவர்க்கே அத்தகைய நாகரீகவழிகளைப் பின்பற்ற உற்சாகமுண்டாகும். "பிரஜைகளை சிருஷ்டிக்கும்பொழுதே பிரம்மன் ஒவ்வொருவன் தலையிலும் விதியெழுதியனுப்புகிறான். அதன்படி நடந்தே தீரும். விதியைவெல்ல யாரால் முடியும். கர்மபலம் யாரைத்தான் விட்டது" என்பனவாதிய போதனைகளால் மனச் சாந்தியடையும் நம்மவரிடத்து, நெப்போலியன், கரிபால்டி, புக்கர்டி வாஷிங்டன், ஆலிவர் கிராம்வெல், லாயிட் ஜார்ஜ் இவர்களின் கதைகளைச் சொன்னால் பருப்புவேகுமா? வேகவே வேகாது. "நான் யார்? நீ யார்? உலகமாவதேது? எல்லாம் மாயை! உற்றார் உறவினர் எல்லாம் சந்தையிற் கூட்டம்!!" என்பனபோன்ற சிந்தனைகள் யாவருள்ளத்தும் இடம் பெற்றிருக்கும்போது, தேசாபிமானம் எவ்வாறு உண்டாகும்? பாஷாபிமானம் எவ்வாறு உண்டாகும்? சமுதாயாபிமானம் எவ்வாறுண்டாகும்? ஆங்கில வித்தியாப்பியாசத்தினால் இதயம் விரியப்பெற்று இந்தியதேசத்தின் பரிதாபகரமான நிலைமையை உணர்ந்து வருந்தியவரும், இந்தியாவின் க்ஷேமத்திற்காகத் தன் ஜீவிதகாலம் முழுதும் உழைத்தவருமான ராஜாராமோஹன் ராய் கூறிய மொழிகளைப் பாருங்கள். "Neither can much improvement arises from such speculations as the following which are the themes suggested by Vedanta—in what manner is the soul absorbed in the Deity? What relation does it bear to the Divine Essence? Nor will youths be lifted to be better members of the Society by the Vedantic Doctrine which teaches them to believe that visible things have no real existence, that as father, brother etc. have no actual entity they consequently deserve no real affection and therefore the sooner we escape from them and leave the world the better. டாக்டர் J. C. போஸ் அவர்களுக்கு மதுரைமா நகரத்தார் வந்தனோபசாரப் பத்திரிகையளித்தபொழுது அவர்களும் அநேகமாய் இம்மொழிகளைத் தழுவியே பேசினார்கள். இதனாலே நாம் வேத வேதாந்தங்களை யெல்லாம் தள்ளிவிட்டு நிரீசுரவாதிகளாய்ப் போகவேண்டுமென நான் சொல்லவரவில்லை. மனிதனுக்காக வேத, வேதாந்தங்கள் ஏற்பட்டனவேயன்றி வேதவேதாந்தங்களுக்காக மனிதன் பிறக்கவில்லையென்ற ஞாபகம் மட்டும் நம்மவர்களுக்கு உண்டாகவேண்டுமென்றே விரும்புகிறேன். நம்மவரிடத்துத் தற்காலம் போலியாகவோ மெய்யாகவோ காணப்படும் சகல அபிமானங்களும் ஆங்கிலக் கல்வியின் பயனாய் உண்டாயினவே ஆகும். ஆகவே நமது தேசவளர்ச்சியை உண்மையாக விரும்புவோரெல்லாம் ஆங்கிலபாஷையிலுள்ள அரியபெரிய சரித்திர நூல்களையும், சமுதாயவளர்ச்சிக்கு உதவிபுரிகின்ற பிறநூல்களையும் தமிழில் பிரசுரித்து, தமிழ் மக்களெல்லாம் படித்துப் பயனடையச் செய்யவேண்டுமென்பதே எனது பணிவான அபிப்பிராயம். வெறும் தமிழ்க் கல்வி மட்டும் உடையவர்களோ இப்பொழுதும் திருவிளையாடற் பெரியபுராண காலம் நிகழ்ந்துகொண்டிருப்பதாகவே நம்பியிருக்கிறார்கள், ஐரோப்பாவில் நடக்கும் கொடும்போரும் இந்தியாவில் நடக்கும் இறுகுப்போரும் அவர்கள் கவனத்தை இழுத்தபாடில்லை. குருபூஜைநடத்தல், அன்னச்சத்திரங்கட்டல், ஆலயத் திருப்பணி இயற்றல், தைப்பூசைவிழா நடத்தல், உறியடித்திருவிழா ஆகோஷித்தல், முதலிய புண்ணிய கைங்கரியங்களிலேயே அவர்கள் காலம் செலவாகின்றது. மேனாட்டார் நவம் நவமான போர்க்கருவிகளைக் கண்டுபிடிப்பதிலும், யுத்தத்துக்கப்பால் வியா-

பாரமுறைகளைச் சீர்படுத்தவேண்டிய முறைகளை ஆலோசிப்பதிலும், உணவுப் பொருள்களின் செலவைக் கட்டுப்படுத்துவதிலும் இராப்பகல் உழைக்கின்றார்கள். நம்மவர்களோ விபூதி ருத்திராட்ச மகிமைகளை ஆராய்வதிலும், திருவள்ளுவர் வைஷ்ணவரா சைவரா, கடவுளுக்கு உயிருண்டா இல்லையா என்று வாதப் பிரதிவாதங்கள் நடத்துவதிலும் தங்கள் முழுவன்மையைச் செலவழிக்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு ஸ்திரீ, தற்கால யுத்தத்தை, சென்ற கிறிஸ்தமஸ் பண்டிகையன்றுதான் அறிந்தாளாம். அதை ஒரு விநோத ஸம்பவமாக ஆங்கிலப் பத்திரிகைகளெல்லாம் கூறுகின்றன. நமது நாட்டிலோ இந்தியா இப்பொழுதும் "சீனத்தான் சீமை" ஆகவே இருக்கிறதென்றும் நமது 'ரெயில்' வண்டிகளும், "மோட்டார் ஸயிக்கில்" முதலிய வாகனங்களும் சீனத்தான் வேலையென்றும் நம்பும் ஜனங்கள் ஒவ்வொரிடத்தும் ஆயிரம் ஆயிரக்கணக்காக வாழ்ந்து வருகின்றார்கள். இவ்விஷயத்தை இன்னும் விரிக்கிற் பெருகும்.

சுருக்கிக் கூறில் நம்மவர்களின் பார்வை முறையும் வாசனையும், படிப்புமுறையும் தேசநன்மைக்குச் சற்றேனும் நன்மைபுரிவனவல்ல. நமது பூர்வநிலைமை, நமது தற்காலநிலைமை, வெளிநாட்டாரின் முற்கால தற்காலநிலைமை இவைகளைப்பற்றிய ஞானம் நம்மவர்களுக்கு உண்டாயினன்றி நமது நிலைமை சீராகவே மாட்டாது. அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வதே உண்மைத் தேசாபிமானிகளின் முக்கிய கடமையாம்.

பிரபஞ்சவிதி.

(2[illegible]4-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீமான் T. V. அருணாசலம் பிள்ளையவர்கள்.

—:o:—

கடைசியில் நேரம் இருட்டியது, கலகக்கார ஈக்களின் நன்மைக்காகவே இருந்தது. கூட்டிலிருந்த ஈக்களெல்லாம் அயர்ந்து தூங்கினமையின் அங்கு நிசப்தமே குடிகொண்டது. சூரியன் உதிக்கவும், முன்னிய எண்ணங்கள் திரும்பவும் ஈக்கள் மனத்தெழுந்து அவற்றைத் துன்புறுத்தின. சிறு ஈயும் அதன் சிநேகிதர்களும் அடிக்கடி கூட்டாலோசனை செய்வதும் தங்களுக்கு ஏற்பட்ட தீங்குக்குப் பரிகாரஞ்செய்வதற்கு வேண்டும் உபாயஞ் சூழ்வதுமாயிருந்தன. இது இவ்வாறாக சுறுசுறுப்பாயிருந்த மற்ற ஈக்கள் இவைகளுடைய சோம்பேறித்தனத்தைக் கவனிக்கவில்லை. கடைசியாக, ஒருவருக்கும் கீழ்ப்படியாத தன்மையுள்ள சில ஈக்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை நிலைநாட்ட எண்ணி தன்னடக்கமெல்லாமிழந்து சண்டையிடத்தலைப்பட்டன. ஆனால் பிரயாணி ஈ அவர்கள் கலகம் விளைப்பதற்குமுன் அவர்களிடம் பறந்துசென்று "நாம் எல்லோரும், வளர்ந்து முதிர்பருவத்தை அடைந்துவிட்டோம்; ஆகையால் ராணிகளாக முடியாது; எல்லோரும் வேலைக்கார ஈக்களாவோம்" என்றது. இந்த நல்ல யோசனையோடு அது, அவர்களைக் கூட்டைவிட்டு வெளிப்படும்படி தூண்டிற்று. காலைவேளைக் காற்றின் சுகத்தை அநுபவிக்க அவைகள் வெளிவந்தபோது அவைகளது கூட்டம் பார்க்க மிக அழகாகவே இருந்தது. ஆனால் தங்களுக்குத் தலைவியாக இருக்க ஒரு இராணியில்லாத ஈக்கள் ஆதாரவற்ற திரள் தானே. அவைகள் திரும்பவும் ஒன்றுசேர்ந்து குழுமியபொழுது முதன்முதலாக ஆலோசனைக்கெடுத்துக்கொண்ட விஷயம் எந்த இடம் தங்க நலம் வாய்ந்தது என்பது.

"ஒரு தோட்டக்காரன் வெறேது" என்றதோர் ஈ. "ஒரு வயல்" என்றது மற்றொன்று. "மரப்பொந்தின் சௌகரியத்துக்கு ஈடு ஒன்றுமில்லை" என்றது மூன்றாவதோர் ஈ. "தோட்டத்திலிருக்கும் வேனல் மண்டபத்தின் முகடு நம்மை மழையின் கொடுமையினின்று காக்கவல்லது" எனமொழிந்தது நாலாம் ஈ. "மரக்கிளை ஒன்றே நமக்கு அதிக சுதந்திரம் தரவல்லது" என்று ஐந்தாவது ஓர் ஈ, மற்றவர்களிட்ட ஓசைக்கு மேலாகக் கேட்கும்படியான ஒரு குரலில் மொழிந்தது. நான் "ஒருவருடைய அபிப்பிராயத்திலும் சேரேன்" என்று தனித்தனி சத்தமிட்டது ஒவ்வொன்றும்.

இவைகள் இம்மாதிரி தம்முள் சண்டையிட்டுக்கொண்டிருந்தால் சீக்கிரம் கடைத்தேறிவிடுவனவே! "காலையிற் பாதிநேரமும் வீணாய்க்கழித்துவிட்டீர்கள்; இன்னும் நீங்கள் ஒரு முடிவுக்கு வரவில்லையே." என்று பிரயாணி ஈ கடுகடுத்துச் சொல்லிற்று. "நீ பேசுவதைப் பார்த்தால் நீ எங்களுக்கு ராணியாயிருக்கவெண்ணுகிறாய் போலிருக்கிறதே. நாங்கள் சண்

டைபோட்டுக் காலத்தைக் கழித்தோமானுல் உனக்கென்ன?— நீ உன் ஜோலியைப்பார், போ" என்று கலகக்கார ஈக்கள் ஏகோபித்து இரைந்தன.

பிரயாணி ஈ மற்றவைகள் தன்னிடம் கேட்டுக்கொண்டபடியே செய்தது. வெட்கமும் துக்கமும் கொண்டு, தன்னுடைய மனநிலையை மறைக்கத் தோட்டத்தின் ஒரு மூலைக்குப்பறந்து சென்றது. அங்கு ஒரு ரஸகதலிவாழை பூத்திருப்பதைக் கண்டு அதிலிருந்த தேனை உண்ணப் போயிற்று. ஆ! அது எவ்வளவு ஆனந்தத்தை அடைந்தது என்கிறீர்கள்! தேன் கூட்டிலிருந்து அதற்கு என்றைக்குமில்லாத அகமகிழ்ச்சியுண்டாயிற்று. "திரும்பவும் பழய கூட்டுக்கே போய் விடுவோமா?" என்றும் தனக்குள் எண்ணிக்கொண்டு ஒரு பூவிலிருந்து [வேறொரு பூவுக்குப் போகும்பொழுது, பக்கத்துப் பூவிலிருந்து] தனது உறவினனுகிய முது ஈ வெளிவருவதைக் கண்டது.

முது ஈ: "உன்னை நான் இங்கு தனியே சந்திப்பேன் என்று கொஞ்சமும் நினைக்கவில்லையே. உன்னுடைய சிநேகிதர்களெல்லாம் எங்கே?"

பிரயாணி ஈ: "எனக்கு அவர்கள் எங்கிருக்கிறுர்கள் என்று தெரியாது. அவர்களைத் தோட்டத்தின் வெளியேவிட்டுப் பிரிந்து வந்தேன்."

மு. ஈ: "அவர்கள் என்ன செய்கிறுர்கள்?"

பிர. ஈ: "......சண்டை செய்கிறுர்கள்......" என்று முனங்கியது.

மு. ஈ: "எதைப்பற்றி?"

பிர. ஈ: "அவைகள் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி"

மு. ஈ. "அழகாய் வெயிலெறிக்கிற இந்தக் காலைப் பொழுதிற் செய்வதற்கேற்ற தொழில்" என்று ஞதோடு பகர்ந்தது.

பிர. ஈ: "தோழ, என்னைப் பார்த்து நகைக்காதே. நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று சொல்லிக்கொடு.—இயற்கை நம்மெல்லோரையும் ஒருப்போல படைத்திருக்கிறது என்று நானறிந்தது மிக உண்மையாகவே தோற்றுகிறது. ஆனுல் நாம் சமத்துவம் காண்பிக்கும்பொழுது சண்டைதான் உண்டாகின்றது" என்று சொல்லிற்று.

மு. ஈ: "உனக்கு எத்தனை வயது ஆயிற்று?"

பிர. ஈ: "எழுநாள்" என்று அடத்துடன் மொழிந்தது.

மு. ஈ: எனக்கு எத்தனை வயதிருக்கும்? உனக்குத் தெரியுமா?"

பிர. ஈ: "நீ பிறந்து அநேகமாதங்கள் கழிந்தாய்விட்டதுபோலிருக்கிறதே."

மு. ஈ: "நீ சொன்னது உண்மை, சிநேகிதா நாம் இப்பொழுது ஒரு மல்யுத்தம் செய்வோம், வா."

பிர. ஈ: "யார்? நீயா? என் கூடவா? குஸ்திக்கா?—நான் உன்னைவிடப் பலமுடையவன்; நீ அடிபட்டுப்போவாய்".

மு. ஈ: "அப்படியானுல் உன்னிலும் பலம் குன்றந்த ஒருவனிடம் நீ ஏன் உபதேசம் பெற வந்தாய்?

பிர. ஈ: அதனுலென்ன? என் உற்றபந்துவே, உன்னுடைய பெலஹீனத்துக்கும், புத்திசாமர்த்தியத்துக்கும் என்ன சம்மந்தம்? நீ மிகுந்த அறிவுடையவனென்றே உன்னிடம் புத்திமதி கேட்க வந்தேன். நான் கீழ்மைப் பட்டவனென்றும் புத்தியில்லாதவனென்றும் எனக்குத் தெரியும்."

மு. ஈ: "பார்த்தாயா?— முதியவன், இளையவன்; பலவான், பலஹீனன்; புத்திமான், மதியிலி;—நம்முடைய சமத்துவம் எங்கு போய்விட்டது? ......காரியமில்லை, போனது போகட்டும். இனி நாமிருவரும் மனம் ஒத்துவாழலாம்"

பிர. ஈ: "எனக்கு முழுச்சம்மதம். ஆனுல் நாம் எங்கு சென்று வசிப்பது?"

மு. ஈ: எல்லாம் நல்லதுதான். நாம் பேத அபிப்பிராயங்கொண்டால், நமக்குள் யார் தீர்மானஞ் செய்வது என்று நாம் இப்பொழுதே உறுதி செய்யவேண்டும்."

பிர. ஈ: "அது நீதான்; நீயே புத்தியுள்ளவன்."

மு. ஈ: நல்லது! உணவைத் தேன் கொண்டுவருவது யார்?"

பிர. ஈ: பலமுடையவன் நான். நான் கொண்டு வருவேன்."

மு. ஈ: "முற்றிலும் சரி. இப்பொழுது செய்த தீர்மானங்களினால் நீ என்னை ராணியாகவும் உன்னை உழைக்கும் ஈயாகவும் செய்துகொண்டாய். அட, பயித்தியக்காரா, பழயவீடும், பழய ராணியும் போதாதா? இரண்டுபேர் ஓர் இடத்தில் வசித்தாலும் வழிகாட்டி ஒருவனும், அவனைப் பின்பற்றுபவன் மற்றவனும் இருக்கவேண்டுமன்றோ? இருவர்க்கு அங்ஙனமானால் ஒரு பெரிய கூட்டத்தின் விஷயத்தில் எப்படி?

மறுத்தற்கரிய இவ்வுண்மையைக் கேட்டு மகிழ்ந்து பிராயாணி ஈ பூவிட்டுப் பூவுக்குப் பறந்து திரிந்து இனிமையான பண்ணிசைத்துப் பாடியது. இவ்வாறு ஒன்றிரண்டு நிமிஷங்கள் கழிய "இப்பொழுது என்னுடைய சிநேகிதர்களிடம் போகவேண்டும் என்றது. இரண்டும்பறந்துபோய் மனப்பொறுமையில்லாத கலகக்காரர்களைக்காணும்படி தோட்டமதிலுக்கு வெளிப்புறம் தேடிப் பார்த்துக் கண்டன. அவைகள் அப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டுதான் இருந்தன. ஆனால் அவற்றின் ஆவியெல்லாம் தளர்ந்துபோயிற்று. பசிநோயும், கலக்கமும் அவற்றைத் துன்பப்படுத்தின. அந்தக் கூட்டத்தில் இருந்த சில ஈக்கள் வழக்கம்போல் இரைதேடிக்கொண்டு வீட்டுக்குப்போகலாம் என்று வெளியே போய்விட்டன.

கொஞ்சநேரத்துக்குப் பிறகு முது ஈயும் பிரயாணம் செய்து 'அறிவு' சம்பாதித்த சிறு ஈயும் தங்கள் சிநேகிதர்களோடு, பூந்தாதுகள் எடுத்துக்கொண்டு 'வீடு'நோக்கித்திரும்புவதை விளையாடிக்கொண்டிருந்த சில பிள்ளைகள் கண்டார்கள். அவைகள் வீட்டினுள் நுழையப் போனபோது, வாசற்காக்கும் வாலிப ஈக்களில் ஒன்று "நில்லுங்கள், இராஜப்பிரேதம் வெளியே போகிறது" என்றது. உண்மையும் அதுவாக இருந்தது. இறந்துவிட்ட ஒரு ராணியை வேலைக்கார ஈக்கள் இழுத்துக்கொண்டு, கூட்டின் ஓட்டுவரைக்கும் வந்து தகனத்துக்காக வெளியே தள்ளிவிட்டன.

பிரயாணி ஈ: "இது என்ன மாயம்? என்ன சம்பவித்தது? நம்முடைய ராணி இறக்கவில்லை?" என்று மிகுந்த சஞ்சலத்துடனும் உள்ளக் கிளர்ச்சியுடனும் வினவியது.

அதற்கு காவலாளி ஈ: "இல்லை, இன்று காலையில் நம் கூட்டில், எதிர்பாராத ஒரு குழப்பம் உண்டாயிற்று. அறைகளைச் சூக்ஷிப்பவர்களில் சிலர் வெளியே போயிருந்தனர். இன்னும் 5 - 6 நாட்களுக்குக்கூட அடைத்துவைத்திருக்க வேண்டிய ஒரு அறையை உடைத்துக்கொண்டு ஒரு சிறு ராணி ஈ வெளிவந்துவிட்டது. கேட்பானேன். இரண்டு ராணிகளும் கை கலந்துகொண்டன. உண்டான சண்டையில் பலம் குறைந்த நம்பழய ராணியே மரணமடைந்தாள். இந்த வருஷம், இதற்குமுன் வருஷங்களிற்போல, தேன் சேகரிக்கும்படி ஒரு கூட்டத்தை சீக்கிரம் அனுப்ப முடியாது. ஆனால் இத்தகைய சமயங்கள் வந்தேதீரும். தடுக்க யரால் முடியும்?" என்றது.

ஆனால் இதைத் தடுத்திருக்கலாம் என்று சிறு பிரயாணி ஈ தனக்குள்ளே சொல்லிக்கொண்டது. ஏனென்றால் தாமே இவ்வளவு குழப்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாயிருந்தோம் என்ற அறிவு அதன் மனத்தை உறுத்திற்று. முதிய ஈ பிராயாணி ஈயைச் சுறண்டிக்கொண்டு, "பார்த்தாயா, ராணிகள் கூட ஒருவர்க்கொருவர் நிகரல்ல. ஆட்சிக்கு ஏககாலத்தில் இருவர் இருக்க ஒண்ணாது" என்று சொல்லிற்று. "ஆம்" என்று முனக்கத்துடன் மற்றதும் பதிலுரைத்தது.

ஆசையின் முடிவு

ஓர் கதை.

ஸ்ரீமாந் V. R. சுந்தரராஜ சர்மா அவர்கள்.

கல்வியறிவில்லாத பிராமணனொருவன் தஞ்சாவூர் அரசன் அரண்மனையின் சமீபமாயுள்ள பாதை வழியாய்ப்போகும்பொழுது, அரண்மனையின் கடைசி உப்பரிக்கையின்மீது தன் தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த அரசன் மகளைக் கண்ணுற்றான். யாவும் துறந்து, தவத்துறையில் தம் காலம்போக்கும் துறவிகளையும் மயக்கவல்ல அவளது அழகில் ஏழைப் பார்ப்பனன் மயங்கித் திகைத்து தன்னையும், சுற்றுமுள்ளவைகளையும் கவனியாது, நின்ற இடத்திலேயே வேரூன்றி விட்டான். 'காதலுக்குக் கண்ணில்லை' என்பது இவனிடம் உண்மையாயிற்று. அவனுடைய மனம் முழுவதும் அவளுடைய அழகின்பால் சென்று

விட்டது. அரசன் அரண்மனையின் முன்பாக, நடுத்தெருவில் நின்றுகொண்டு, அரசன் மகளை உற்று நோக்குவதால் கெடுதி நேருமென்ற எண்ணம் அவனுக்குச் சிறிதும் உண்டாகவில்லை. இச்செய்கையை அரசனே நேரில் கண்டு, இவ்வளவு துணிந்த செயலுக்காக அந்தணன்மீது மிகுந்த கோபம் கொண்டு, தனது ஏவலாளரை விளித்து, அவனைத் தக்ஷணமே கைதிசெய்து தன்முன் கொணருமாறு உத்திரவுசெய்தான். உடனே காவலர் சென்று பிராமணனைப் பிடித்து, வேந்தன் முன் கொணர்ந்து நிறுத்தினர். பார்த்திபன் அந்தணனை விளித்து, அவன் யாரென்றும், இத்தைரியச் செயலுக்குக் காரணம் யாதெனவும் வினவினான். அதற்குப்பார்ப்பான் "அழகு தன்னையுடையவர்களுக்கு யாதொரின்பமும் நல்குவதில்லை; ஆனால் அதைப் பார்ப்பவர்களே அனுபவிப்பார்கள்" எனத் தைரியமாக விடை பகர்ந்தான். இம்மொழி கேட்டலும் வேந்தன் முன்னிலும் கடும் சீற்றம் கொண்டு, அவனது முகத்தில் சூடிட்டு நாட்டைவிட்டுத் துரத்திவிடுமாறு கட்டளையிட்டான். அவ்விதமே அவனைப் பற்பலவிடங்களில் பழுக்கக்காய்ந்த இரும்பால் சுட்டு, கழுதைமீது ஏற்றுவித்து, நாட்டைவிட்டுத் துரத்திவிட்டனர்.

அவன் தஞ்சை நாட்டின் எல்லையை யடையும்பொழுது நன்றாய் இருட்டிவிட்டது. எவண்செல்வதென அவனுக்கு விளங்கவில்லை. சிறிது தூரத்தில் ஓர் காளிகோயிலைக் கண்ணுற்று, சிறிதும் தாமதியாமல் அவண்சென்று நோக்குழி, காளி வெளிப்போந்திருப்பதைக்கண்டு, அவள் உட்புகாதபடி கதவைச் சாத்தித் தாளிட்டுப் படுத்துக்கொண்டான். அவன் கண்ணுறங்குவது எங்ஙனம்? மனம் பூராவும் அவ்வடிவழகியின்பால் சென்றுவிட்டது. அவளை அடையவேண்டிய வழிகளைப்பற்றிச் சிந்தித்தான். அவளை எவ்வித சூழ்ச்சியாலாவது அரண்மனையைவிட்டு ஒருவேளை வெளிப்படுத்திவிட்டாலும் கூட மிகுந்த குரூரரூபமுடைய தன்னையவள் ஒருபோதும் நேசிக்கமாட்டாளே. இனி யாது செய்வது? என 'ஆற்றிடைத் துரும்பு போல' பற்பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது, கதவைத்தட்டுகிற ஓசைகேட்டுத் திடீரென ஓர் எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. அதாவது, கதவைத் திறக்க மறுப்பதால் காளியிடமிருந்து ஏதாவதொரு வரம் பெற்றுக்கொள்ளலாமென்பதே. அதனால் சிறிதுநேரம் சும்மாவிருந்துவிட்டு, தட்டுதல் அதிகப்பட்டபடியால், "நான் கதவைத் திறந்தால் எனக்கு யாது கைமாறு கருவாய்" எனக்கேட்டான். "நீ விரும்புவது யாதாயிருப்பினும் தரத்தயாராயிருக்கின்றேன். எனக்கு மிகுந்த களைப்பாயிருக்கின்றது. ஏதாவது மூன்று வரங்கள் கேட்டுக்கொள்" என்றனள். பார்ப்பான் மிகுந்த ஆனந்தம் கொண்டு, "நீ உண்மையான காளியாயிருப்பின் முதலாவது வரமாக நாளைப்பொழுது புலருமுன் நான் தஞ்சையின் கொற்றவனாக முடிதரிக்கவேண்டும்; இரண்டாவது, நாளைப்பொழுதுசாயுமுன் நான் தஞ்சாவூரின் அரசன் மகளை மணக்கவேண்டும்; நான் இன்னும் 'உன்னை வேண்டும்பொழுது நீ தரவேண்டிய மூன்று புதுவரங்களை எனது மூன்றாவது வரமாகும்," எனக் கேட்டுக்கொண்டான். காளி "தந்தே"னென உறுதிமொழி பகரவே பார்ப்பனன் மிகுந்த இன்பமுற்றுக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து காளியை சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். காளியும் அவனை ஆசீர்வதித்துவிட்டு, உட்சென்று, கதவையடைத்துக்கொண்டு உறங்கினாள்.

அதேசமயத்தில் தஞ்சை வேந்தன் திடீரென மாள, அவனுக்கு ஆண்சந்ததியின்மையால், பட்டத்துயானை ஓர் அரசனைத் தெரிந்துகொண்டு வருவதற்கு அனுப்பப்பட்டது. அது நேராக நமது பிராமணன் இருந்த காளிகோயிலையடைந்து, தான் கொணர்ந்த மாலையை அவனது கழுத்திற்சூடி அவனைத் தன் முதுகின்மீது ஏற்றிக்கொண்டு நகரத்தைநோக்கிச் சென்றது. இதையறிந்த அந்தணன் தான் இவ்விதமிருந்தால் இராஜகுமாரி தன்னை ஏற்றுக்கொள்ள மாட்டாளென்றெண்ணி, முதலாவது, தான் மிகுந்த அழகுடையவனாக வேண்டுமென்றும், இரண்டாவது, அக்காலத்துப் பண்டிதர்களுக்குச் சரியான கல்வியறிவுடையவனாக வேண்டுமென்றும், மூன்றாவதாகத் தான் இன்னும் விரும்பும்பொழுது வேறு மூன்றுவரங்கள் வேண்டுமெனவும் எண்ணினான். தக்ஷணமே அவன் விரும்பியவாறே யாவும் நடந்தேறின. நகரையடைந்தவுடன் அங்குள்ளார் யாவரும் அவனைத் தமது அரசனாக ஏற்றுக்கொண்டனர். அரசனது மகள் முதற்றடவை கண்டபொழுதே அவன்மீது மோகம் கொண்டாள். இவ்வாறு சிறிதுகாலம் சென்றபொழுது, இதை வெறுத்து புதுமாதிரி சுகம் அடைய விரும்பினான். உடனே அவன் காளியை நினைந்து, முதலாவது உலகம் முழுவதையும் ஆளும் பராக்கிரமம் தனக்குண்டாக வேண்டுமென்றும், அரசகுமாரியை விட மிகுந்த சுந்திரவதிகளான ஆயிரம் மனைவிகள் தனது இரண்டாவது வரமாகவும், கடைசியாக தான்

இன்னும் விரும்புகையில் வேறு மூன்று வரங்கள் வேண்டுமென்றும் விரும்பினான். அவைகளையடைந்தும் அவனது மனச்சோர்வு நீங்கிற்றில்லை. அதனால், மறுபடியும் உலகத்திலுள்ள சிறு பிராணிமுதல் வெகு தூரத்திற்கப்பாலுள்ள நக்ஷத்திரங்களீறாகவுள்ளவைகளிலும் நடக்கும் சங்கதிகளை அறியவல்ல வல்லமை வேண்டுமென்றும், அற்புதங்களும், அபூர்வமாய்ப் பல காரியங்களை நடத்தும் சக்தியும், தான் விரும்பும்போது வேறு மூன்று வரங்களும் வேண்டுமென்றும் நினைத்தான். இவைகள் யாவையுமடைந்து, உலகத்தாரால் ஓர் அவதாரபுருஷனாகக் கருதப்பட்டான். இவ்விதமிருந்தும் அவனுக்குச் சந்தோஷம் சிறிதளவும் ஏற்படவில்லை.

குடும்பக்கவலை, குடிக்கலக்கம் முதலானவைகள் அவன் மனத்தை வாட்டின. அவன், சந்தோஷம், கோபம் முதலான குணங்களை மாறிமாறி யடைந்து வந்தான். பெரும்புயலில் அகப்பட்ட நாணல்போல அவன் மனம் தத்தளித்தது. கடலின்மீது நடப்ப[illegible] ஆகாயத்தை ஊடுருவிச் செல்லுவதும் அவனுக்[illegible] சந்தோஷமளிக்கவில்லை. ஒரு பொருள் ஆனந்தம் கொடுத்தால் பத்துப்பொருள்கள் மனச்சோர்வையுண்டாக்கும். உயிருடனிருப்பதே ஓர் பெரும் பாரமாகத் தோன்றிற்று. பல தடவைகளில் தற்கொலை புரிந்துகொள்ளவெண்ணியும், மறுபடியும் இவ்வுலகில் பிறக்க நேருமேயென்ற பயத்தால் அவ்வெண்ணத்தையொழிந்தான். நீரிலும் நிலத்திலும் யாதொரு சுகமும் நுகரவில்லை. இவ்வாறு பலதடவை சிந்தித்து ஆசையென்பதை யொழித்தால்தான் மனத்திருப்தியுண்டாகுமென்றெண்ணினான். ஆயின் ஆசையை ஒழிப்பது எங்ஙனம்? கனவுகளாலும் துன்பமில்லாத சுகநித்திரை புரியவேண்டும். "ஆனால் யான் இன்னும் யாதுபொருளையடையவில்லை? யாவற்றையும் அடைந்தாய்விட்டதே." எனச் சொல்லிக் கொண்டான். இவ்விதமிருக்கையில் திடீரென அவனுக்கோரெண்ணமுண்டாயிற்று. இவ்வுலகைப் படைத்தவர் யாவர்? அவர் எங்ஙனமிருப்பார்? அவரைத் தான் காணவேண்டுமென்ற ஆசையே அவனுக்குண்டாயிற்று. இவ்வாசையில் அவனது உடைந்த மனதிற்கும் ஊக்கம் உண்டாயிற்று. உடனே அவன் காளியை நினைந்து, முதலாவது தனது மனச்சஞ்சலம் தீரவேண்டுமென்றும், இரண்டாவது வரமாக எல்லாம் வல்ல இறைவனைக் காணவேண்டுமென்றும், இனித் தான் நினைக்கும்போது வேறு மூன்றுவரங்கள் கிடைக்கவேண்டுமென்றும் எண்ணினான். காளியின் வரப்பிரசாதமகிமையால் அவனுடைய மனதுக்குள் ஓர்வித ஆனந்தம் ஜனித்தது. இவ்வுலகம் யாவையும் படைத்துக்காக்கும் கடவுள் தன் மனதிற்குள்ளாகவேயிருக்கக்கண்டான். இதைக் கண்ணுற்றதும், அவனுடைய அபூர்வசக்தி, விஸ்தாரமான நாடு, தேவகன்னிகைகளையொத்த மனைவியர், ஊடுருவிச்சென்ற நக்ஷத்திரங்கள் மனவருத்தம், சந்தோஷம், அதிருப்திமுதலிய யாவும் மறைந்துபோய்விட்டன. இதற்குமுன் தான் செய்தவையும், கண்டவையும் கனவெனத்தோற்றின. தானே கடவுளென்றெண்ணினான். "நானே பாக்கியவான். நானே கடவுள். எனக்குமேலாக யாதொன்றுமில்லை" என ஆனந்தக் கூத்தாடினான்.

இவ்விதம் வெகுநாட் செல்ல, காளி ஒரு நாள் அவன் முன்னம் தோன்றி, இன்னும் பாக்கியிருக்கும் வரங்களை ஏன் பெற்றுக் கொள்ளவில்லையென வினவினாள். அதற்கவன் "நான் இப்பொழுது அடைந்திருப்பதைக்காட்டிலும் இனி அடையப்போவது பெரிதல்ல. அதைவிட அரியசுகம் வேறொன்றிலது. நான் மிகுந்த உயரமான பதவியையும், நித்யானந்தத்தையும் இப்பொழுது அடைந்துவிட்டேன். என்னுடைய கடைசிவரம், நான் இந்த நிராசையான நிலைமையை என்றும் அனுபவிக்குமாறு அருளப்பிரார்த்திக்கின்றேன்" என்றான். காளியும் அவ்விதமே அனுக்கிரகித்துவிட்டு மறைந்தனள்.

பிறந்தநாள் வாழ்த்து.*

1. ஏரோரும் வஞ்சித் திருமூல மன்னமரும்
பேரார் அநந்தைப் பெருககரில்—ஏராரும்

2. மாதர் கலாசாலை வாழ்ந்துநாளும்பெருக
ஆதரவாய் நிற்கும் அருந்தகையே—கோதிலாத்

3. தொல்குலத்து வந்துதித்த தோகையே தோற்றமுறப்
பல்கலையும் சேர்ந்துறையும்பாக்கியமே—சொல்கருணை

4. வள்ளலாம் ஈசன் மலரடியின் வாசந்தன்
உள்ளெலாம் வீசுகின்ற உத்தமியே—எள்ளளவும்

5. தன்பெருமை காட்டாத நன்மையளே தாயின்மிகும்
அன்புநிறை டோருவாட்ஸ் அம்மையே-இன்பொடுயாம்

---

* திருவனந்தபுரம் மாதர் கலாசாலை லேடி பிரின்சிப்பால் D. H. வாடஸ் அம்மாளின் பிறந்தநாளன்று அவ்விடம் பாடப்பெற்றது.

6. வந்தனங்கள் செய்து வழங்கும் உரையிவற்றைச்
சிந்தை கனிந்துசெவி சேர்த்திடுவாய்—சந்ததமும்

7. செய்வினைகள் எல்லாம் திருத்தமுறச் செய்யவுன்போல்
கைவருந்தித் தேர்ந்தவரைக் கண்டதில்லை—வையமிசை

8. இன்சொல்லால் ஆகாத இல்லையென எங்களுக்குன்[கன்
பொன்சொல்லே காட்டிநிதம் போதிக்கும்—விஞ்சுமெங்

9. நெஞ்சிற் கவலையெல்லாம் நின்முகத்தே நின்றொளிரும்
புன்சிரிப்பைக் கண்டஞ்சிப் போய்விடுமே—தஞ்சமென

10. வந்துதொழும் ஏழை மனங்குளிரப் பல்பொருளும்
தந்துதவும் உன்றன் தயை பெரிதே—முந்தையுளோர்

11. எண்ணெண் கலைக்கும் இருப்பிடிக்கும் நாயகமாய்
வண்ணமணி மங்கையரை வைத்திடத்தான்—எண்ணு

12. காரணமே தென்று கருத்தழிவோர்க் குன்காட்சி[யொரு
பூரணமாய் ஞானம் புகட்டாதோ—தாரணியில்

13. ஓர் மதலை அம்மாவென் றோதப்பெறினதுவே
நேர்தவத்தின் பேறாய் நினைந்திடுவார்—கூர்மதியே!

14. ஆயிரத்தின் மிக்க அருமைமக்கள் அன்னையென்று
நேயத்தோ டுன்னை நிதமழைக்க—நீயென்ன

15. மாதவந்தான் செய்தாயோ! மாதருக்கு வேறிதனின்
ஓதரிய பேறிவ் வுலகிலுண்டோ—ஏதமிலா

16. மெய்ப்புகழும் சீரும் மிகுசுகமும் மென்மேலும்
எய்ப்பின்றி நீயெய்த எம்பெருமான்—பொற்பதத்தை

17. எத்தினமும் வேண்டி இதய மலர்விரியப்
பத்திசெய்வோம் நாங்கள் பணிந்து.

D. S. P.

மாயமறைவு.

(131-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீமாந் T. V. சங்கரக்குமாருப் பிள்ளையவர்கள்.

அந்த நிலவறையின் தளத்தின் மேல் ஒரு சிறு அறை கட்டப்பட்டிருந்தது. அவ்வறையைச் சுற்றி வராந்தா ஓடியிருந்தது. வராந்தாவில் நின்று அறைக்குள் நுழைய இரண்டு வாயில்கள் இருந்தன. அவை அடைக்கப்பட்டிருந்தன. வராந்தாவில் பழய ஏட்டுச்சுருள்களும் ஒடிந்த பெட்டி முதலியவைகளும் குவிக்கப்பட்டிருந்தன.

நிலவறைமுழுதும் இருள் மயமாகவே இருந்தது. நிலவறைக்குள் நுழையும் அவ்வதிசயவாசல் திறந்திருந்ததனால் மட்டும் கொஞ்சம் வெளிச்சம் அந்தவறையின் சிலபாகத்தில் பரவியது. அந்த வெளிச்சத்தின் உதவியால் தான் ஸ்ரீநிவாசன் கீழே இறங்கிவந்தது உள்ளே யாராவதிருந்து தன்னை குறிநோக்கிச் சுடக் கூடுமென்று மெத்தவும் பயந்தான். ஆகையால் நிரம்ப எச்சரிக்கையுடன் படிக்கட்டின் வழியாக இறங்கி வராந்தாவில் ஒருவருமில்லை என்று திட்டப்படுத்திக் கொண்டு ஒரு மூலையில் சென்று பதுங்கி இருக்க எத்தனித்தான். மூலையில் சென்று இருந்தானோ இல்லையோ அதற்குள் ஸ்ரீநிவாசனைநோக்கி ஒரு கறுத்துப்பருத்துருண்ட தேகத்தையுடைய ஒருவன் தன் கையில் கம்பு ஏந்தி ஓடிவருவதைக்கண்டான். சிறிது நேரத்துக்குள் தன் பக்கமாக "டும்" என்ற இரைச்சலுடன் ஒரு குண்டு பாய்ந்து போனதாகவும் உணர்ந்தான். ஸ்ரீநிவாசனைச்சுட எய்த அந்தக் குண்டு குறி தப்பி, கம்புடன் வந்த கறுப்பண்ணன்மேல் பாய அவன் அடியற்ற மரம்போல் கீழே விழுந்திறந்தான். தன்னைக் கொல்ல எண்ணிச் சுட்டவனை ஸ்ரீநிவாசன் தன் கையிலிருந்த பிஸ்டலால்சுட அவனும்—[illegible]ரெங்கன்—கீழேவிழுந்து புரண்டுமாண்டான்.

இதற்குள் நிலவறையின் உள்ளறையில் "ஐயோ" என்ற பெண்தொனி ஒன்று கேட்க, ஸ்ரீநிவாசன் அந்த அறையின் கதவொன்றைப் பலமாய்த் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்ந்தான். எதிர்பாராதபடி வெடி முழக்கங்கள் கேட்டமையால் அறைக்குள் கிடந்த பெண் பயந்து தன்னையறியாமலே கதறினாள்.

... .

மேற்கூறிய சம்பவங்கள் நடந்தேறிய அதே நாள் மாலை சுமார் எட்டுமணி இருக்கும். பங்கஜம் அவள் தாய், தம்பி ஸ்ரீநிவாசன் நடேசன் இவர்கள் ஐவரும் பங்கஜத்தின் வீட்டின் மேல்மாடியிலிருந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சந்தோஷத்திற்கு காரணம் யாதாயிருக்கக்கூடுமென்று வாசகர்களே ஊகித்த[illegible] கூடும். பங்கஜத்தை இனிமேல் காண்பதருமை என்று எண்ணித்தவித்துத் தத்தளித்த சிவகாமி அம்மாள் பங்கஜத்தை உயிருடன் காண நேர்ந்தமைபற்றி அடைந்த சந்தோஷத்திற்கு அளவுண்டோ? பங்கஜமும் தந்தை தாய் முதலியோரைத திரு[illegible]பவும் காணப்பெற்றமையால் பூரியாது என்ன செய்வாள்?

பங்கஜமிருக்குமிடத்தைத் அத்துணைக் கஷ்டத்திற் கிடையில் கண்டுபிடித்த ஸ்ரீநிவாசனை எல்லோரும் புகழ்ந்து அவனுக்கு மனதார நன்றிசெலுத்தினார்கள். சரியான கைம்மாறு எதுசெய்வோம் என்று சிவகாமி அம்மாள் திகைத்தாள். ஸ்ரீநிவாசன் பங்கஜத்தைக் கண்டுபிடித்தது தன் சாமர்த்தியத்தாலல்ல என்றும் தெய்வத்தின் உதவி நிரம்ப இருந்ததால் ஸ்தோத்திர மெல்லாம் கடவுளுக்கே அர்ப்பிதமென்றும் கூறினான்.

நடேசன்:—“பங்கஜம், அன்று மாலை உனக்கு நேரிட்ட சம்பவங்களை சவிஸ்தாரமாகக் கூறு, கேட்க ஆவலாக இருக்கிறோம்” என்று சொல்ல பங்கஜம் குதூகலத்துடன் சொல்லத் தொடங்கினாள்.

“நான் அன்று மாலை பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது கழிந்த சில நாட்களாக என்னுடன் உறவாடிவரும் பெண் ஒருவள் என்னை அவள் வீட்டுக்குச் சற்றுநேரமாவது வந்து காப்பி சாப்பிட்டு விட்டுப் போகவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். நான் ஆதியில் மறுத்தேனாயினும் “என் வீட்டுக்கு வந்தாவது என்னை கௌரவப்படுத்தக் கூடாதா” என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள, நான் மறுத்தது சரியல்லவென்று அவளுடன் வருவதாக ஒப்புக்கொண்டேன். எங்கள் பள்ளிக்கூடத்துக்குச் சற்று அப்பால் இருக்கும் ஒரு பாழும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். வீட்டினுடைய எதிர் உள்ளே நுழைந்ததும் ஒருவன் என்முன் திடீரெனத் தோன்றி மஞ்சள் நிறம்போன்ற ஒருவித வாசமுடைய துணியை என் முகத்தில் பிடித்தான். அவ்வளவு தான் எனக்குத்தெரியும். எனக்கு நல்ல ஞாபகம் வந்தபொழுது நிலவறையிலுள்ள அறையில் கிடக்கக் கண்டேன். அன்று காலை நான்கு மணிக்கெல்லாம் சுந்தரத்தின் தம்பியான ரெங்கனும் ஒரு தடியனும் என்னிடத்தில் வந்து ஏதோ பிதற்றிக்கொண்டிருந்தார்கள். ரெங்கனுடைய யோசனையின்படி பாழும் வீட்டின் பக்கத்து வீட்டுக்காரியான கலியாணியின் உதவியால் என்னை ஏமாற்றி அழைத்துவரும்படி செய்ததாகவும் அப்படி செய்தது என் நன்மைக்கே என்றும் ரெங்கனுடைய வாய்ப்பிறப்பில் நின்றும் அறிந்தேன். கடைசியில் ரெங்கனை நான் மணந்துகொள்ள வேண்டுமென்று என்னை இருவர்களும் வற்புறுத்தினார்கள். நான் அதற்கு உடன்படாவிட்டால் என்னை பலவந்தப்படுத்துவதாகவும் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பதிலொன்றும் சொல்லாது மௌனமாய் இருந்துவிட்டேன். அன்று மாலைக்குள் அவசியம் உடன்பட வேண்டுமென்றும் இல்லாவிடில் அன்று இரவே பலவந்தமாய் விவாகம் நடைபெறும் என்று சொல்லி இருவரும் மறைந்தார்கள். அவர்கள் சென்றதும் எனக்கு அடக்கமுடியாத துக்கம் மேலிட்டது. என் கதியை உன்னி உன்னி ஆறாகக் கண்ணீர் வடித்தேன். நண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நொந்து என்னையறியாமலே கண்ணயர்ந்துவிட்டேன். எத்தனைநேரம் தூங்கி இருப்பேன் என்று தெரியவில்லை. துப்பாக்கியின் ஓசையால் கண்விழித்துக் கொண்டேன். இந்த மகான் (ஸ்ரீநிவாசனை சுண்டிக் காணித்துக்கொண்டு) என் முன் நிற்கக் கண்டேன். நடந்தது யாவும் என்னை இவர் அறிவித்தார். கவலை விட்டேன். உங்கள் அனைவரையும் கண்டேன்” என்று உள்ளக்கிளர்ச்சியுடன் சொல்லி முடித்தாள்.

வாசகர்காள், சுந்தரம் ஏன் இந்த பாழும் வீட்டில் கட்டுண்டு கிடந்தான் என்று ஐயமுறக்கூடும். பங்கஜம் கலியாணியுடன் போவதை தற்செயலாய்க் கண்ட சுந்தரம் அவள் எங்கே போகிறாள் என்று அறிய ஆவல்கொண்டு இருவரையும் பின்பற்றினான். பங்கஜம் பாழ்வீட்டுக்குள் நுழைந்ததும் அவனுக்கு சந்தேகம் பிறந்தது. சிலநேரமாக வெளியே காத்திருந்தான். அவள் வெளியே வரவில்லை. அவளுக்கு ஏதோ ஆபத்து சம்பவிக்கப் போகிறதாக உணர்ந்து ஒத்தாசைக்கு வீட்டினுள் பாய்ந்தான். கருப்பண்ணன் தந்திரமாக சுந்தரத்தைப் பிடித்து அவன் கை கால்களைக்கட்டி ஓர் அறையில் அடைத்துவிட்டான். பின் கருப்பண்ணனும் ரெங்கனும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். சுந்தரம் தங்கள் கையில் சிக்குண்டதே ரெங்கனுக்கு மெத்தவும் அனுகூலமென்று எண்ணினார்கள். சுந்தரத்தின் சொத்தும் ரெங்கனுக்குக் கிடைக்க பிரயத்னப்படவேண்டுமென்று கருப்பண்ணன் அபிப்பிராயப்பட ரெங்கனும் ஒப்புக்கொண்டான். அதற்கு சுந்தரத்தைக்கொண்டு ஒரு இஷ்டதானம் எழுதித் தரும்படி பலவந்தப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ரெங்கன் ஒரு வக்கீலினிடம் அனுப்பப்பட்டான். அவருக்கு 50 ரூபா கொடுத்து ஒரு பத்திரத்தில் வாசகங்கள் எழுதிவாங்கி பாழ்வீடுநோக்கி வந்துகொண்டிருந்தான். அந்த சமயமே ஸ்ரீநிவாசன் அவனை பின்பற்றியதாக இரண்டாம் அத்தியாயத்தில் கூறினோம்.

பங்கஜம் காணாமற்போன அந்த நாள் இரவில் பாழ்வீட்டுக்குள் நுழைந்த ஸ்ரீநிவாசன் சுந்தரத்தைக் கண்டதும் அவனை வெளியே அழைத்துச்சென்றதாக சொன்னேனல்லவா? சுந்தரம் வெளியே போயிருக்கும்போது வீட்டினுள் ஏதோ ஒரு அரவம் கேட்டதாக எண்ணிக் கறுப்பண்ணன் விழித்துவிட்டான். அங்குமிங்கும் நோக்குகையில் சுந்தரம் அங்கு இல்லாததை அறிந்தான். கட்டுண்டு கிடந்த சுந்தரம் வெளியே சென்றது அவனுக்கு மாயமாகத்தோன்றிற்று. அவர்கள் சூட்சியை யாரோ ஒருவர் அறிந்திருக்க வேண்டுமென்று புலப்பட்டது. கடைசியில் ரெங்கனும் கறுப்பண்ணனுடன் கலந்து சுந்தரத்தைத்தேட சுந்தரம் மரத்தடியில் கிடப்பதை கண்டார்கள். கறுப்பண்ணன், சுந்தரத்தை சுட்டான். இருவரும் வீட்டிற்குள் நுழைந்து வீட்டில் நெருப்பை வைத்துவிட்டு பங்கஜம் அடைக்கப்பட்டிருந்த அந்த நிலவறைக்குள் சென்று மறைந்து கொண்டார்கள். பங்கஜத்தைத் தூக்கிக்கொண்டு அந்தசமயம் அந்தப்பாழும் வீட்டில் நின்றும் வெளியேறுவது ஆபத்துக்கிடமாகுமென்று என்று எண்ணியே இப்படிச் செய்யத்துணிந்தார்கள்.

நாம் ஒருவாறு கதையின் இறுதியை அடைந்துவிட்டோம். ஆனால் கறுப்பண்ணனும் ரெங்கனும் எந்த நோக்கங்கொண்டு திருவனந்தபுரத்துக்கு வந்தார்கள் என்று சொல்வது அவசியமாக தோன்றுகிறது.

ரெங்கசாமி பாளயங்கோட்டை ஜெயிலிலிருந்து விடுதலைப்பட்டதும் கறுப்பண்ணன் என்ற மறவனோடு உறவுகொண்டான். பங்கஜத்தின் தந்தையிடத்தில் ரெங்கனுக்காய் இருக்கும் பணத்தை அவன் பெறவருகையில், ரெங்கன் பங்கஜத்தை விவாகம் செய்து கொள்வானாகில் அவளது ஏராளமான சொத்தும் அவனுக்குச் சேரக் கூடுமென்று கறுப்பண்ணன் எடுத்தோத அவனும் அதற்கிணங்கி அவர்களது கோரிக்கையைத் தந்திரமாக நிறைவேற்ற இருவரும் திருவனந்திக்கு வந்தார்கள்.

முற்றும்.

Realization

(from Appar)

Like faultless Vina waking soul
To slip from bonds and seek the goal,
Like evening moon dispersing guide
Our darkness with umburning light,
Like south winds thrilling with their breath
Our souls to joy that knows no death,
Like waxing spring unveiling still
New glories with infinite skill,
And like the tank inspring peace
Where with rich horey drunk the bees
Hum in the grove's secure repeat,
Are father Isan"s sheltering feet., (1)

....

He is the fire in fuel veiled.
Like ghee in milk he stands concealed,
All lustrous like the purest gem.
Plant churning-rod of love. Its stem
Wrap round with rope of insight true.
Pull hard and churn. He comes in view.

THE HEART'S SECRET.

How can I to Thy heart reveal
The painful joy that throbs in me,
When other mouths flow full with praise
And other faces smile on thee?
Now words, mere words, seem but the shell
Whence divers' hands have torn the pearl.
Yet in the flood of futile rain
One spark fire's banners may unfurl.
The words I speak Thy lips have tought,
And thou hast lit the thoughts that burn
My nature's ore, to yield pure gold.
They seek their home. O, do not spurn.

(1) The above translated literlly would run as follows:—

Like faultlss Vina, evening moon,
The southwind's breath or waxing spring,
Or tank where bees hum honey drunk,
Is shade of father Is'an's feet.